செ.வெ.எண்-20 நாள்-11.04.2018

# பத்திரிக்கைச் செய்தி

இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம் 2009ன்படி வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு சிறுபான்மையற்ற தனியார் பள்ளிகளில் 2018-19 கல்வியாண்டில் இட ஒதுக்கீட்டின்படி சேர்க்கை வழங்குதல்.

இத்திட்டத்தில் எல்கேஜி அல்லது ஆரம்ப வகுப்பில் மொத்தமுள்ள சேர்க்கைக்கான இடங்களில் 25% இடங்களுக்கு இலவச மறும் கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம் 2009ன்படி வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு சிறுபான்மையற்ற தனியார் பள்ளிகளில் சேர்க்க விரும்பும் பெற்றோர்கள் 20.04.2018 முதல் 18.05.2018 வரை இணைய வழியாக எங்கிருந்து வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். இதற்கான வசதி www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலகம் / மெட்ரிக்குலே'ன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம் மாவட்டத்தொடக்கக்கல்வி அலுவலர் / மாவட்டக்கல்வி அலுவலர் / உதவித்தொடக்கக்கல்வி அலுவலர் / அனைவருக்கும் கல்வி இயக்கக வட்டார வள மைய அலுவலகங்களில் சட்டப்பிரிவு 12(1) (சி) இன் கீழ் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை இணையவழியில் விண்ணப்பிக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சேர்க்க விரும்பும் பள்ளிகளில் விண்ணப்பங்கள் பெற்றால் அதனை பள்ளியிலேயே இணையவழியில் பதிவேற்றம் செய்யலாம். உடன் சார்ந்த பெற்றோர்களுக்கு ஒப்புகைச்சீட்டு வழங்கப்படவேண்டும்.

ஒவ்வொரு தனியார் சுயநிதிப்பள்ளியிலும் தகவல் பலகையில் அந்த பள்ளிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இடங்கள் குறித்து 16.04.2018 அன்று விண்ணப்பங்களை வரவேற்று அறிவிப்பு வெளியிடப்படும்.

விண்ணப்பங்கள் அரசாணைகளில் வரையறுக்கப்பட்டவாறு நிராகரிக்கப்பட்டால் அதன் விவரம் 22.05.2018 அன்று மாலை 5.00 மணிக்கு பள்ளித்தகவல் பலகையில் தெரிவிக்கப்படும். தகுதியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 25% ஒதுக்கீட்டினை விட கூடுதலாக இருந்தால் குலுக்கல் முறையில் 23.05.2018 அன்ற தேர்வு செய்யப்படுவர்.

வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆதரவற்றவர் / எச்ஐவி ஆல் பாதிக்கப்பட்டவர் / மூன்றாம் பாலினத்தவர் / துப்புரவுத்தொழிலாளர்களின் குழந்தைகள் / மாற்றுத்திறனாளிகள் போன்றோரிடமிருந்து பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்களுக்கு குலுக்கல் நடத்துவதற்கு முன்பே சேர்க்கை வழங்கப்படும்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்ப எண்ணுடன் பள்ளித்தகவல் பலகையில் ஒவ்வொரு பிரிவிற்கும் 5 இடங்கள் கொண்ட காத்திருப்புப்பட்டியலுடன் 24.05.2018 அன்று வெளியிடப்படும். அப்பட்டியலில் ஆய்வு அலுவலர் பள்ளியின் தலைமை ஆசிரியர் / பள்ளி முதல்வர் / குறைந்த பட்சம் இரண்டு பெற்றோர்கள் கையொப்பம் இடுவர்.

தேர்வு செய்து சேர்க்கை செய்த மாணவர்கள் விவரத்தை பள்ளிக்கு வருகை புரிந்த ஆய்வு அலுவலரால் அன்றைய தினமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

எனவே, இத்திட்டத்தில் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை சேர்க்கை செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**